NEWS CORNER

# RAAK
## Nursing and Paramedical College

No.1, Muthupillai Palayam Road, Sulthanpet Post, Puducherry - 605 110









Raak Nursing and Paramedical college organized lamp lighting ceremony on 12th November,2011. Dr.G.Josephine R Little flower, the Registrar of Tamil Nadu Nurses and Midwives council was the chief guest. The program was inaugurated by Mr. Abdul Rahimane, Secretary of Farouk Educational trust, Prof.S.P.Subashini, Principal of Raak Nursing and Paramedical College delivered the welcome address and Mrs. Joyce Varughese, Correspondent of East Coast college of Nursing delivered the Nightingale pledge to the Nursing students. The college organized a workshop on "Mechanical Ventilator" on 1st October, 2011. The resource person was Dr.Sreenivasan, HOD of Dept of Anesthesiology.

## Congratulations!!

Prof. S.Ani Grace Kalaimathi, Principal, MIOT College of Nursing, Chennai, is the first NURSING faculty to become the Governing Council member in The TN Dr.M.G.R. Medical University, Chennai.

# இது உங்கள் இடம்

## 'பள்ளி நர்ஸ்' நியமித்தால் போதும்...

பேராசிரியர் டாக்டர் எஸ்.ஆனி கிரேஸ் கலைமதி, சென்னையிலிருந்து எழுதுகிறார். தனியார் பள்ளியில், வாழைப் பழம் சாப்பிடும்போது, தொண்டையில் அடைத்து, ஒரு குழந்தை இறந்தது, மிகவும் மோசமான நிகழ்வு. உண்மையைக் கூற வேண்டுமெனில், நம் நாட்டிற்கு இது ஒரு பெரிய அவமானம்.

இது ஒரு சிறிய முதலுதவி, 'ஹெமிலேக் மெனுவர்' என்ற முறைப்படி, குழந்தையின் அடைப்பை, ஒரு நர்ஸ் எடுத்திருக்க முடியும். வளர்ந்த நாடுகளில், ஒவ்வொரு பள்ளியிலும், ஒரு பள்ளி நல நர்ஸ் இருப்பார். அவர், குழந்தைகளின் சுகாதாரத்தை பராமரிப்பது மட்டுமின்றி, முதலுதவிகளையும் அளிப்பார்.

ஆனால், நம் நாட்டில், 'பள்ளி நல நர்ஸ்' என்பவர், ஏட்டளவில் மட்டுமே உள்ளார். அதற்காக, பள்ளிகளில் மருத்துவமனை கட்ட வேண்டும்: மருத்துவர்களை அமர்த்த வேண்டும் என்பது அவசியமே இல்லை: தகுதி வாய்ந்த, பதிவு பெற்ற நர்ஸ் ஒருவரை, ஒவ்வொரு பள்ளியிலும், கட்டாயமாக நியமிக்க வேண்டும் என்று சட்டம் கொண்டு வந்தாலே போதும். இது போன்ற அசம்பாவிதங்களை தடுத்து விடலாம்.

மேலும், நம் நாட்டின் வளர்ந்து வரும் பிரச்னைகளான குழந்தை பருமன், குழந்தைப் பருவ சர்க்கரை வியாதி போன்றவற்றைக் கூட, நர்ஸ் எளிதில், தொடர் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு மூலம், ஆசிரியர் மற்றும் பெற்றோருக்கு முன்னதாகவே அறிவிக்க முடியும். இதனால், நாம் வருங்காலத்தில் சந்திக்கப் போகும் பிரச்னைகளை சரிசெய்ய முடியும்.

நான் ஒரு நர்சிங் கல்லூரியின் முதல்வர் என்ற முறையில் பதிவு செய்ய விரும்புவது இது தான்:

நம் நாட்டில், மருத்துவர் மட்டுமே சிகிச்சையளிக்க வேண்டும் என்ற கருத்து உள்ளது. இந்நிலை மாறி, அடிப்படை நல உதவிகளுக்கு, நர்சுகள் பணியாற்ற, சிகிச்சையளிக்க வாய்ப்பளித்தால், மருத்துவர் பஞ்சம் மற்றும் போலி மருத்துவர்கள் போன்றவற்றை களைந்து விடலாம்.

ஆப்ரிக்கா போன்ற வளரும் நாடுகளில், பட்டதாரி நர்சுகள் இந்த பணியை, செவ்வனே செய்து வருகின்றனர். மேலை நாடுகளில், இது ஒரு அங்கீகரிக்கப்பட்ட பணியாக கருதப்படுகிறது. இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, பத்திரிகைகளும், மீடியாக்களும் முன்வர வேண்டும்.

எனவே, நம் குழந்தைகளை காக்க, ஒரு பள்ளி நல நர்சை பணியமர்த்த வேண்டும். அதை சட்டமாக்கி செயல்படுத்த வேண்டும்.

**தினமலர் - 14.12.11**

# Parts of Syringe and Needle

